**Arul Anandar Journal of Science & Arts**
*Volume 1, Februray 2026*

# சங்க இலக்கியங்களில் ‘பறை’ இசைக்கருவி: சமூகப் பயன்பாடும் பண்பாட்டு பரிணாமமும்

மலர்விழி
மதுரை , தமிழ்த்துறை அருள் ஆனந்தர் கல்லூரி
malarvizhipommu@gmail.com

**சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இசைக்கருவிகளில் ‘பறை’ குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை மற்றும் புறநானூறு போன்ற சங்க நூல்களில் பறை தொடர்பான குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. பறை என்பது ஒரு இசைக்கருவி மட்டுமல்ல; சமூகத் தகவல் பரிமாற்றம், போர் அறிவிப்பு, விழாக்கள், வழிபாடு, தொழில் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைந்த பண்பாட்டு கருவியாக விளங்கியுள்ளது.

இக்கட்டுரை சங்க காலத்தில் பறை இசைக்கருவியின் தோற்றம், அதன் சமூகப் பயன்பாடு, இசை மரபு, கலைஞர்களின் நிலை மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியை இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்கிறது. சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இசை அறிவு, சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டு முதிர்ச்சியை வெளிப்படுத்தும் முக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**முக்கியச் சொற்கள்**

பறை, மண்டைப்பறையர், இசைக்கருவிகள், சங்க இலக்கியம், இசை, போர்

## முன்னுரை

### இசையும் இயற்கையும் – தமிழர் இசை மரபு

**கண்ணீர்,**
**இறைவனும் இயற்கையும் ஒன்றுதான்;**
**இசையால் உணரும் போது**
**காற்றின் வேகங்கள் கொஞ்சம்**
**தாழ்ந்து அமைதியுடன்**

**நெடும்பறை வந்து ஒலிக்கிறது.**
**தன்னைத் தானே மறந்து கால்கள் ஆடுகின்றன…**
**இசை, தாளம், யாழ் என எதையும் அறியாமல்…**

உலக இசைத் துறையின் வரலாற்றைக் கண்டு ஆய்ந்தால், தொல்பழங்காலத்திலேயே நுட்பமான இசையறிவு பெற்றுத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் காண முடியும். பிற நாடுகளில் இசைக்கலை நாட்டுப்புற இசையின் தன்மையை அடைந்திருந்த காலத்திலேயே தமிழர்கள் இசைச் செவ்வியல் நிலையைக் கொண்டிருந்தனர்.

பண்டைய கால ஆரியர்களும் எகிப்தியர்களும் 'பித்தகோரஸ்' போன்றோர் உயர்ந்த, நேர்த்தியான இசை வடிவத்தைப் பெறுவதற்கும் முன்னரே, பண்டைய தமிழகத்தில் அறிவியல் அடிப்படையில் மிக உறுதியான, தலைசிறந்த, வளர்ச்சியுற்ற இசை முறைகள் தனித்துவமாக உருவெடுத்திருந்தன.

இந்த இசை முறைகள் இந்தியத் துணைக்கண்ட நாடுகள் – சீனா, ஜப்பான், பாரசீகம், அரேபியா, கிரீஸ் – ஆகிய நாடுகளிலும் பெரும் செல்வாக்கைச் செலுத்தியிருந்தன. பித்தகோரஸ் தன் இசையறிவை இந்தியாவிலிருந்தே பெற்றார் என்று மேற்கத்திய அறிஞர் ஸ்ட்ரோபோ கூறுகிறார்.

பித்தகோரஸ் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். குரல் திரிபு முறையின் அடிப்படையில் பண்களை உருவாக்கும் முறையை தமிழர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே அறிந்து வைத்திருந்தனர். சுரங்கள், பாவங்கள் இந்த அடிப்படையிலேயே பெறப்பட்டன.

**இசைக்கான இலக்கிய ஆதாரங்கள்**

இதற்கான அடிப்படைச் சான்றுகள்:

தொல்காப்பியம்

சங்க இலக்கியம்

சிலப்பதிகாரம்

சீவக சிந்தாமணி

பெருங்கதை

கல்லாடம்

போன்ற பண்டையத் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கர்களும் சீனர்களும் இம்முறையிலேயே தங்கள் இசை வடிவங்களைப் பெற்றனர் என்பது இசை ஆய்வாளர்களின் கருத்தாகும்.

உலகில் மொழி உருவாகுவதற்கு முன்னரே இசை பிறந்துவிட்டது என்பது பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் அடிப்படையிலான கருத்தாகும். அதன் பின்னரே மொழி தோன்றி, எழுத்தும் பாடலும் பிறந்தன. இந்த அடிப்படையில் தமிழிசை மிகவும் தொன்மையானதாகும்.

**தொல்காப்பியத்தில் இசை**

தொல்பழங்காலத்தில் இசைக்கலை சிறப்புடனும் சிறப்புமிக்கதாகவும் விளங்கியதற்கு தொல்காப்பியமே சான்று பகர்கிறது. நிலத்தையும் பொழுதையும் முதன்மைப் பொருளாகக் கூறிய தொல்காப்பியர், அவற்றிற்கான கருப்பொருளாக பறையையும் யாழையும் குறிப்பிடுகிறார்.

**"தெய்வம் உணவே மாமரம் புல்லறி**
**செய்தி யாழின் பகுதியொடு தொகை"**
*(தொல். அகத். 20)*

இங்கு 'பறை' என்பது அனைத்து தாளக் கருவிகளையும், 'யாழின் பகுதி' என்பது அனைத்து இசைக் கருவிகளையும், பண்களையும் குறிக்கிறது.

**இசைக்கருவிகளின் வகைகள்**

பொதுவாக இசைக்கருவிகள்:

தாள இசைக்கருவிகள் (Percussion Instruments)

காற்றிசை கருவிகள் (Wind Instruments)

நரம்பிசை கருவிகள் (String Instruments)

மணி / உலோக இசைக்கருவிகள் (Bell & Metal Instruments)

என சங்க நூல்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியப் பாடல்**

**குழல் குழறி நரம்பின் தீண்டொலி கொண்ட**
**தழுவிக் கண்ணோடு இசைய நொதுங்கும்**
**பண்ணிசை கூட்டம் தழையவும் பிறவும்**
**கண்ணூட்டத்தாற்படா தூங்கொலி முழங்கி**
**காவில் திகழ்ந்த துறைசூழ் கலைப்பெருமை**
*(புறநானூறு - 41)*

**பாணர் - இசைக் கலைஞர்கள்**

'பாணர்' என்பவர்கள் தமிழ்ச் சமூகத்தின் தொடக்கநிலைப் பாடகர்களாக அறியப்பட்டவர்கள். மரபு வழிப்பட்ட வாய்மொழிப் பாடல்களைப் பாடும் இயல்பினர். பண் இசைத்தவர்கள் பாணர்கள் என அழைக்கப்பட்டனர்.

"பாணர் – பண்பாட்டின் காலம் என்பது தொல்பழங்கால மக்கள் சமூகத்தில் முதன்முதலில் இலக்கியம் தோன்றிய காலகட்டமாகும்" என்று வ. வரதராசன் குறிப்பிடுகிறார்.

**துடி - போர் இசைக்கருவி**

துடி ஒரு சிறப்பான தாள இசைக்கருவியாகும். போரின் தொடக்கத்தை அறிவிப்பதற்குத் துடி பயன்படுத்தப்பட்டது. போர்க்களத்தில் துடியின் ஒலி வீரர்களுக்கு வீர உற்சாகத்தை ஏற்படுத்தியது.

**"துடி கைய துலங்கு வேல்"** *(புறம். 285:2)*

துடியாளர்கள் அரசர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மன்னரின் மார்பில் திகழ்ந்த வேல், துடியாளரின் கையில் இருந்தது.

**பறை - சமூகப் பயன்பாடு**

‘பறை’ இசைக்கருவி மட்டுமல்ல; அது ஐந்திணை நிலங்களின் அடையாளமாகவும், மக்களின் வாழ்க்கைச் செயல்பாடுகளோடு இணைந்த கருவியாகவும் இருந்தது.

குறிஞ்சி – தொண்டகச் சிறுபறை

முல்லை – எருங்கோல் பறை

மருதம் – தண்ணுமை

நெய்தல் – மீன் கோல் பறை

பாலை – ஆற்றுப் பறை, துடி

போரில் வெற்றியை அறிவிக்க:

**“இசைப் பறையோடு வெற்றி ஏதல்”**

**பறையின் பல வடிவங்கள்**

சங்க இலக்கியங்களில்:

- தட்டிப் பறை
- சிறுபறை
- மரப்பறை
- மென்பறை
- போர்ப்பறை
- ஆட்கள்பறை

என பல பெயர்களில் பறை குறிப்பிடப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழர்களின் இசை மரபு உலகளாவிய அளவில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பறை, துடி போன்ற இசைக்கருவிகள் ஒருகாலத்தில் சமூக மரியாதையுடன் போற்றப்பட்டவை. காலப்போக்கில் அவை

ஒதுக்கப்பட்டாலும், சங்க இலக்கியங்களில் அவற்றின் உயரிய நிலை தெளிவாகப் பதிவாகியுள்ளது.

பறை இசை மீண்டும் தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த, மரியாதைக்குரிய கலைவடிவமாக மீள வேண்டும். இதற்காக பறை இசைக்கருவி குறித்த மேலதிக ஆய்வுகள் மிக அவசியமாகின்றன.

**மேற்கோள்கள்**


1. ஜெயமோகன், எம். (2008). தொல்காப்பியம் – மூலம் மற்றும் உரை.கீழட்சி புத்தக நிலையம், மதுரை – 1.
2. ராம். கு. நே. வே. (ப.ஆ.). பத்துப்பாட்டு – மூலம்.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. முனுசாமி, கதி. ப.ஆ. (2017). பத்துப்பாட்டு – மூலம் மற்றும் உரை.சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 14.
4. சுப்பிரமணியன், சு. வே. (2009). சிறுபாணாற்றுப்படை.மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 01.
5. சுப்பிரமணியன், சு. வே. (2009). பெரும்பாணாற்றுப்படை.மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 01.
6. சுப்பிரமணியன், சு. வே. (2009). பொருநராற்றுப்படை.மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 01.
7. காந்திதாசன், க. (2011). சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்க்கை.உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113.
8. சிவத்தம்பி, கா. (2004). பழைய தமிழ் சமூகத்தில் நாடகம்.குமரன் புத்தக இல்லம், சென்னை.
9. பக்தவச்சல பாரதி (2011). பாணர் – இடவியல்.அடையாளம் பதிப்பகம், குருநகர் சாலை, புத்தனத்தம் – 10.
10. பக்தவச்சல பாரதி (2011). பண்பாட்டு மானுடவியல்.அடையாளம் பதிப்பகம், குருநகர் சாலை, புத்தனத்தம் – 10.
11. பக்தவச்சல பாரதி (2011). தமிழர் மானுடவியல்.அடையாளம் பதிப்பகம், குருநகர் சாலை, புத்தனத்தம் – 10.
12. கலைவாணி, இரா.; ராஜேந்திரன், தமிழ் நேசன் (2005). சங்க இலக்கியத்தில் இசை.ஓவியர் பதிப்பகம், மயிலாடுதுறை – 609001.

# தோற்கருவிகள்


தடாரி


முழவு


முரசு


சந்திர வளையம்


தமுக்கு


உறுமி மேளம்


தம்பட்டம்


நகரா

## தோற்கருவிகள்




தவண்டை



பேரிமத்தளம்



செண்டா



பம்பை




கிடு கிட்டி



பஞ்சமுக வாத்தியம்



குளிர்



எல்லாரி

## தோற்கருவிகள்



துடி




கிணைப்பறை



கரடிகை



பறை



ஆகுளி



இடக்கை



உடுக்கை



கண்டை